**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in


---

பெறுநர்,                                                                                    தேதி: 12.08.2024
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண் தொழில்நுட்பங்களை வணிகமயமாக்கல் குறித்த வேளாண் ஆராய்ச்சி மாணவர்கள் கருத்தரங்கம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலகம், கோயம்புத்தூரில் ஆகஸ்ட் 12 மற்றும் 13, 2024 ஆகிய நாட்களில் "9வது வேளாண் ஆராய்ச்சி மாணவர்கள் கருத்தரங்கத்தை (AGSC) வேளாண் தொழில்நுட்பங்களை வணிகமயமாக்கல் என்ற தலைப்பில் ஏற்பாடு செய்துள்ளது. கருத்தரங்கின் தொடக்க நிகழ்வில் முதுகலை பட்ட மேற்படிப்பு பயிலக முதன்மையர் முனைவர் தே.சுரேஷ்குமார், பல்கலைக்கழகம் சார்பாக சிறப்பு விருந்தினர்களை வரவேற்று பேசினார். இதனையடுத்து பேசிய தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையத்தின் இயக்குனர் முனைவர் ந.செந்தில் இக்கருத்தரங்கின் முக்கியத்துவத்தையும் வருங்காலங்களின் வேளாண்மைக்கான தீர்வுகளையும் பற்றி பேசினார். நிகழ்வின் சிறப்பு விருந்தினரான வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் இயற்கை வள மேலாண்மை மற்றும் காலநிலை மாற்றப் பிரிவின் ஆலோசகர் முனைவர் S.பாஸ்கர் வேளாண்மையில் காலநிலை மாற்றங்கள், மேற்கு தொடர்ச்சி மலைகளின் பாதுகாப்பு, பாலைவனமயமாக்கல், கரியமில வாயுவை குறைத்தல், கரிம வர்த்தகம், சுழற்சி பொருளாதாரம் ஆகியவை குறித்த சிறப்பானதொரு துவக்கவுரையை நிகழ்த்தினார். மேலும் பேசிய அவர் பசுமைக்குடில் வாயுக்களை குறைப்பதற்கான அறிவியல் நுட்பங்களைப் பற்றியும் காலநிலை மற்றும் வேளாண்மைக்கான அரசு திட்டங்களைப் பற்றியும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தினார். தலைமையுரை வழங்கிய வேளாண் பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி இந்த நூற்றாண்டுக்கான வேளாண் வணிகமயமாக்கல், இயந்திரமயமாக்கல் மற்றும் தன்னியக்கமாக்கலுக்கான முன்னெடுப்புகள், இக்கருத்தரங்கத்தின் சிறப்புகள், பல்வேறு வேளாண் உட்துறைகளின் முக்கியத்துவம், பல்கலைக்கழகம் மற்றும் மாணவர்களின் சாதனைகள் பற்றி உரை நிகழ்த்தினார். வெவ்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மொத்தம் 1254 பங்கேற்பாளர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்று தங்கள் பங்களிப்பைச் செலுத்தினார்கள். இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட

சிறப்பான 427 சுவரொட்டி விளக்கக்காட்சிகளும் 66 வாய்வழி விளக்கக்காட்சிகளும் அடங்கும். மேலும் இந்நிகழ்வில், கருத்தரங்க சுருக்கத் தொகுப்பு புத்தகத்தின் முதல் நகலினை வெளியிட அதை சிறப்பு விருந்தினர் முனைவர் S.பாஸ்கர் பெற்றுக்கொண்டார். இக்கருத்தரங்கு தேசிய அளவில் எதிர்கால விவசாயத்திற்கு வழிக்காட்டும் முன்னெடுப்பாக அமையப்பெற்றது.

***மக்கள் தொடர்பு அலுவலர்***